
SAINT
MATILDA,
Pray for Us!

# புனித மெற்றில்டா (895-968)

இவளை இளம் வயதிலேயே ஒரு கன்னியர் மடத்தில் விட்டு வைத்தனர். இங்கு இவள் தையல் வேலை கற்றுக் கொண்டாள். உழைப்பையும், செபத்தையும், ஞானவாசகத்தையும் இவள் நேசித்தாள். இவள் பெற்றோர் இவளை மணமுடித்துக் கொடுத்தார்கள். இவளுடைய கணவர் அரசரானார். பக்தியுள்ள மெற்றில்டாவும் அரசியானாள். பலவித புண்ணியங்களால் இப்பதவியை அலங்கரித்தாள். நோயாளி களையும், துன்புற்றோரையும் சந்தித்துப் பேசினாள். பாமரர்களுக்கு வேத சத்தியங்களைக் கற்பித்தாள். கைதிகளுக்கு உதவி செய்தாள். பாவிகளை மனந்திருப்ப முயற்சிப்பாள். இவளது கணவர் அனைத்திலும் இவளோடு ஒத்துழைத்தார். 936-ஆம் ஆண்டில் அரசர் இறந்தார். அவர் இறந்த உடனே அவருடைய ஆன்ம இளைப்பாற்றிற்காக இவள் திருப்பலி செய்வித்தாள். அதிலிருந்து இவள் உலக மகிமைகளையெல்லாம் துறந்தாள். இவளுக்கு மூன்று ஆண் மக்கள் உண்டு. மூத்த மகனுக்கும், இரண்டாவது மகனுக்குமிடையே சண்டை. இவள் மூத்தமகனைச் சார்ந்து இருந்தாள். இந்தக் குற்றத்திற்காக வெகு துன்பப்பட்டு பரிகாரம் செய்தாள். இரு மக்களுமே இவளை நெடுநாள் கொடூரமாக நடத்தினார்கள்.

**சிந்தனை:**

உழைப்பும், செபமும், ஞான வாசகமும் புண்ணிய பாதையில் முன்னேற சிறந்த சாதனங்களாகும்.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் பாவிகள் மீது அனுதாபம் கொள்ள வரம் தாரும்.